**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10032026-10034

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.11.2025

Accepted: 29.12.2025

Published: 01.01.2026

Citation:
Raja, A. "Historical Records from the Copper Plate Inscription of the Vadakal Palayakkarar: Based on the Evidence from the Tamil University Museum." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 48–53.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10034

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Historical Records from the Copper Plate Inscription of the Vadakal Palayakkarar: Based on the Evidence from the Tamil University Museum

**Dr. A. Raja**

*Head, Department of Museum, Tamil University, Thanjavur*

*http://orcid.org/0000-0001-8820-2413*

**Abstract**

*Pottery shards with sripts, copper plates, stone inscriptions, palm-leaf manuscripts, and paper documents serve as evidentiary sources that narrate the ancient history of Tamil Nadu. Furthermore, these inscriptions serve as primary sources that describe the culture, administrative systems, social structures, and the donations and charities given to temples and society. In this context, this article discusses the historical information contained in the copper plate inscription from the period of the second Maratha king Sahaji, which was found in the Palayakkarar mansion at Vadakal in the Sirkazhi taluk of Mayiladuthurai district.*

***Keywords:*** *Thanjavur Maratha Copper Plates, Vadakal Copper Plate Details Land Grants and Boundaries, Land Grant, Maratha Historical Records.*

**References**

1. Raju,S., (1983), Thanjai Marathiyar cheppedukal-50, Tamil University, Thanjavur.
2. Raju,S., (1987), Thanjai Marathiyar kalvettukal, Tamil University, Thanjavur.
3. Raja, A., (2024), Thanjai Marathiyar kaala kalvettukal, shanlax International journal of Tamil Researh, vol.9 (2).
4. Subramaniyam, T.N., (1977), Thenninthiya koyil sasanankal, Vol.2, Arasinar keezhthisai chuvadi Noolagam, Chennai.
5. Srithar, T.Sri., (2005), Thamilaga Cheppedukal, State department of Archaeology, Chennai.
6. Venkataramaiah, K.M., (1987), Thanjai Marathiyar mannar varalaru,Tamil University, Thanjavur.
7. Venkataramaiah, K.M., (1987)Thanjai Marathiyar mannar kaala arasiyalum samuthaya vaazhkaiyum,Tamil University, Thanjavur.

# வடகால் பாளையக்காரர் மாளிகை செப்புப் பட்டயம் கூறும் வரலாற்றுப் பதிவுகள் : தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகச் சான்றுகளை முன்வைத்து

*முனைவர் ஆ. ராஜா*
தலைவர், அருங்காட்சியகத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ஆய்வுச்சுருக்கம்**

*எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள், செப்பேடுகள், செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், காகித ஆவணங்கள் முதலியவை தமிழகத்தின் பண்டைய வரலாற்றையும் தொன்மையையும் பண்பாட்டையும் அரச நிர்வாக முறைகளையும் சமுதாய கட்டமைப்புகளையும் கோயில்களுக்கும் சமுதாயத்திற்கும் கொடுக்கப்பட்ட தானம், தர்மங்களையும் எடுத்துக் கூறும் முதன்மை ஆதாரங்களாக திகழ்கின்றன. அவ் வகையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டத்திலுள்ள வடகால் என்ற இடத் திலுள்ள பாளையக்கார மாளிகையில் கிடைத்த இரண்டாம் மராட்டிய மன்னர் சகசி காலத்தைச் சார்ந்த செப்புப் பட்டயம் கூறும் வரலாற்றுச் செய்திகளை இக்கட்டுரை விளக்குகின்றது.*

## முன்னுரை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்துள்ள வடகாலில், வடகால் துரை என அழைக்கப்படும் திரு வி. எசு. செல்வம் இராவுத்த மிண்ட நபினார் மாளிகையில் இருந்த இப்பட்டயத்தை அவரே முன்வந்து 6-12-1982 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். இப்போது இச்செப்புப் பட்டயம் தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் உள்ளது. இப் பட்டயத்தின் வாயிலாக அறியப்படும் வரலாற்றுச் செய்திகளை ஆய்ந்து இக்கட்டுரை விளக்குகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கல்வெட்டு ஆய்வாளர் வை. சுந்தரேச வாண்டையார் 1960ஆம் ஆண்டு வடகாலுக்கு அருகே உள்ள திருக்குருகாவூருக்கு சென்று இச்செப்புப் பட்டயத்தைப் பார்வையிட்டு அதே ஆண்டு சனவரி பதினொன்றாம் நாள் வெளிவந்த சுதேசமித்திரன் நாளிதழில் இச்செப்புப் பட்டயம் பற்றிய சில செய்திகளை வெளியிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை மேனாள் பேராசிரியர் செ.இராசு அவர்கள் இப்பட்டயத்தை முழுவதுமாகப் படித்து வெளியிட்டுள்ளார்.

## செப்புப் பட்டயத்தின் அமைப்பு

பல்லவர், பாண்டியர், சோழர்களின் செப்பேடுகள் அனைத்தும் ஏடுகளாக காணப்படுகின்றன. ஆனால் தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் நீள்சதுர வடிவில் அமைந்துள்ளன. அவ்வகையில் நீண்ட சதுர வடிவில் அமைந்துள்ள இச் செப்புப்பட்டயத்தின் தலைப்பில் அதிக வேலைப்பாடு ஏதும் இல்லாமல் காணப்படுகிறது. இப்பட்டயம் 7.5 செ.மீ. விட்டமுடைய அரைவட்டமான ஒரு கைப்பிடியும் அதில் இரண்டு சமமான துளைகளும் உள்ளன. இத்துளைகள் கயிற்றைச் செருகிக் கட்டிவைப் பதற்குப்

பயன்பட்டிருக்கும். செப்புப்படயத்தைச் சுற்றிலும் இடையே பூ வேலைப்பாடுகளுடன் இரு இணை கோடுகள் வரையப்பட்டுச் சட்டம் போட்டது போன்று காட்சியளிக்கிறது

### வரலாற்றுப் பதிவுகள்

தமிழ் மொழியிலுள்ள இச் செப்புப் பட்டயம் மராட்டிய மன்னர் சகசி என்பவரால் 27.10.1701ஆம் வெளியிடப்பட்டுள்ளது. தஞ்சைப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களை மராட்டிய மன்னர்கள் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது இச்செப்புப் பட்டயத்தின் வாயிலாகவும் பிற மராட்டியச் செப்பேடுகளின் வாயிலாகவும் அறியமுடிகிறது.

### செவிவழிச் செய்திகள்

இராவுத்த மிண்ட நயினார் என்பது வடகால் பாளையக்காரர்களுக்குரிய பட்டப்பெயர் ஆகும். தருமபுர ஆதீனத்துச் செப்பேடுகள் இரண்டிலும் இம் மரபினர் குறிக்கப் பெறுகின்றனர். இவர்களின் முன்னோர் அக்கினிக் குதிரை ஏறி அனேக வரிசை பெற்றவர்கள் என்று கூறப்படுகிறது. இரும்பினால் குதிரை செய்து பழுக்கக் காய்ச்சிய அக்குதிரையின்மேல் தம் உடம்பில் வாழைமரப் பட்டையைக் கட்டிக் கொண்டு ஏறியவர் இக்குடும்பத்தின் முன்னோர் என்ற வரலாறு செவிவழிச் செய்தியாகக் கூறப்படுகிறது.

குதிரைகளுள் வேறுசிலர், "தமிழ்நாட்டுக்கு வந்த வெளிநாட்டுக் 'அக்கினிக் குதிரை' என்பது பாரசீக நாட்டுக் குதிரை அது மிக்க வேகமும்சுறுசுறுப்பும்உடையது.அடங்காத அக்குதிரை ஒன்றை இவர்கள் முன்னோர் அடக்கிப் பரிசும், பாராட்டும் பெற்றனர். அதனால் 'அக்கினிக் குதிரை ஏறிய' என்ற சிறப்பை இப்பரம்பரையினர் பெற்றனர்" என்பர். தமிழ்நாட்டுப் பாளையக் காரர்களும், சிற்றரசர்கள் பலரும் அடங்காத குதிரைகளை அடக்கினர் என்ற வரலாறு எங்கும் கூறப்படுவதொன்று. உண்மை எது வாயினும் 'இராவுத்தர்' என்பது குதிரை வீரர்களுக்கு உரிய பெயர் ஆகும். மிண்டர் என்றால் மிக்க வல்லமையுடையவர் என்பது பொருள். கொங்கு நாட்டுப் பழைய கோட்டைப் பட்டக்காரர்கட்குரிய பல பட்டப் பெயர்களில் 'காமிண்டன்' என்பதும் ஒன்று. காப்பதில் வல்லமை பெற்றதாலேயே அம்மரபினர் அப் பெயரைப் பெற்றதாகக் கூறுகின்றனர். சொட்டைமுனை என்ற ஆயுதத்தில் வல்லமை உடைய அம்மரபினரை "ஓங்கு சொட்டைக்காரர் மிண்டன் உத்தமக் காமிண்டன்" என்றே புலவர்கள் பாடுகின்றனர். நயினார் என்றால் தலைவன் அல்லது எசமானன் என்று பொருள். இன்று சமண சமயத்தவருள் ஒரு பிரிவினரும் இப்பெயரைப் பெற்றுள்ளனர். இப் பாளைய மரபினர் அனைவரும் தங்கள் இயற்பெயருடன் 'இராவுத்த மிண்ட நயினார்' என்ற பட்டங்களைச் சேர்த்துக் கொள்கின்றனர் (செ.இராசு,1983: பக்.31-88).

### இரண்டாம் மராட்டிய மன்னர் சகசி காலத்து செப்புப் பட்டயம்

மராட்டிய வம்சம் தஞ்சையை மையமாக கொண்டு சுமார் 180 ஆண்டுகள் ஆட்சிபுரிந்துள்ளனர். அந்தக்காலகட்டத்தில் கல்வெட்டுகள், செப்பேடுகள், செப்புப் பட்டயங்களில் வரலாற்றுப் பதிவுகள் பதிவுசெய்யப்பட்டன. அவ்வகையில் கி.பி. 1701 ஆம் ஆண்டு இரண்டாவது மராட்டிய மன்னன் சகசி ஆட்சியின்போது வடகால் அழகப்ப இராவுத்த மிண்ட நயினார் பேரனும் நல்லப்ப இராவுத்த மிண்ட நயினார் மகனும் ஆகிய அழகிய சிதம்பர இராவுத்த மிண்ட நயினார் அவர்கள், குரு ஸ்வாமியள், ராய தீட்சிதர்,

புரோகித ராமய்யர், சீனிவாச தீட்சிதர், பெரிய திருக்காம சாஸ்திரியள், சின்னத் திருக்காம சாஸ்திரியள், அநந்த நாராயண சாஸ்திரியள், மகாதேவ சிவன், நாராயண சாஸ்திரியள், திம்மண்ணா பாகவதர், அய்யவாரு பண்டிதர், வேங்கடய்யன் என்ற பன்னிரெண்டு அந்தணர்களுக்குத் நமக்குச் சொந்தமான வரிசைப் பத்துக் கிராமத்தில் நிலக்கொடை அளித்தார். அதைப் பற்றி குறிப்பிடுவதே இச்செப்பேடு ஆகும். பன்னிரு அந்தணர்களும் சீகாழிச்சீமை பச்சை மாகாணத்தில் பிளியஞ் சோழகன் இருப்பான நல்ல நாயக புரத்தில் இருந்தவர்கள் ஆவர்.

### நிலக்கொடையும் எல்லைகளும்

இச்செப்புப்பட்டயம்அந்தணர்களுக்கு கொடையாகக் கொடுத்த நிலத்துக்குக் எல்லைகளும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது வடக்கே தில்லயோடப் புதுக்கரையும் தெற்கே காடும் கிழக்கே கொட்டாப் புளித் திடலும் மேற்கே வேட்டங்குடி தென்னமரத்து வெளி சின்னக் காடு வெட்டியும் எல்லைகளாக உள்ளன. இந்த எல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், காடு, கரம்பு, குளம், குட்டை, நீரோடும் வாய்க்கால்அனைத்தையும்அளித்துள்ளனர். இக்குறிப்பிலிருந்து இந்நிலம் "காடு கொன்று நாடாக்கிக்குளம்தொட்டுவளம்பெருக்கிய" புதிய நிலம் என்பது புலனாகிறது. இப் பரம்பரையின் வேறு சிலர் பெயர்களும் செப்புப் பட்டயத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இப் பெயர்களினால் சைவ சித்தாந்தம், வடமொழி இரண்டிலும் இவர்கள் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள் என்பது தெரிய வருகிறது. செப்பேட்டின் இறுதியில் தான சாசனங்களில் பொதுவாகக் குறிக்கப்பெறும் வடமொழிச் சுலோகங்களில் ஐந்து, கிரந்த எழுத்தில் எழுதப் பெற்றுள்ளன. அதன் தமிழ் வரி வடிவமும், மொழிபெயர்ப்பும் இங்கே அளிக்கப் பெற்றுள்ளன.

### செப்புப் பட்டயத்தின் முழு வாசகம்

1. உ சுபமஸ்து சிதம்பரம் ஸ்வஸ்தஸ்ரீ உ
2. உஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரந் அரிய தளவிபாடன் பாஷைக்கி தப்பு வா
3. ராத கண்டந் மூவராய கண்டன் சுண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதா
4. ன் இம்மண்டலங் கொண்டு யீழந்துரை கொண்டான் ராஜாதி ராஜந்
5. ராஜ பரமேஸ்வரன் ராஜ மாத்தாண்டன் ராச கம்பீரன் ஒட்டிய தள விபா
6. டன் துலுக்கர் மனோகரந் தவுழ்த்தான் ஸ்ரீ வீரப்பிரதாபன் பூருவ தக்ஷி
7. ண பச்சிம உத்தர சதுஸ் ஸமுத் திராதிபதி ப்ரௌட தேவ மகாராயற்
8. ப்ரதிவி ராஜ்யத்தில் போசல வம்சம் மகாராஜ ராசஸ்ரீ ஏகோஜி மஹா
9. ராஜா ஸாஹேபு அவர்கள் புத்ரன் ராஜஸ்ரீ ஸஹஜி மகாராஜா ஸா
10. ஹேபு அவர்கள் ஸ்ரீ சோள மண்டல ராஜ்ய பரிபாலநம் பண்ணுகியி
11. ல் சாலீவாஹந சகாப்தம் வர்ஷம் 1623 கலியுகாப்தம் வ
12. ர்ஷம் 4802 இதின் மேல் செல்லா நிண்ட வ்ருஷ வர்ஷம் அல்பிசி
13. மீ 12உ சுக்ல பக்ஷம் சோம வாரம் சப்தமி திருவோண நக்ஷ
14. த்திரமும் சௌபாக்ய நாமயோகமும் கூடின சுபதிநத்தில் ராஜாதி ராஜ
15. வளநாடு வெண்ணயூற் வழுதலம்பட்டு சாவடிக்கி தெற்க்கு கொள்ளடத்து
16. க்கு தெற்க்கு காவேரிக்கு வடக்கு உபய காவேரி மத்யாந சீகாழிச் சீமை
17. பாளயக்காறர் நீலகர்ம கத்வஜ ராஜ பிரிதாங்கரான அக்நி குதிரை
18. யேறி அநேகம் வரிசை பெத்த ராய ராவுத்த மிண்ட னயிநாற் அவர்க
19. ள் அழகப்ப ராவுத்த மிண்ட நயினாற் அவர்கள் பௌத்ரராய ராஜஸ்ரீ நல்ல
20. ப்ப றாவுத்த மிண்ட நயினாற் அவர்கள் புத்ர ராஜஸ்ரீ அழகிய சிதம்பர ரா

21. வுத்த மிண்ட நயினாற் அவர்கள் பூமி தான சாசநம் பண்ணி குடுத்தபடி சீ
22. காழிச் சீமை பச்ச மாகாணத்தில் பிளியஞ் சோழகனிருப்புக்கு ப்ரதி
23. னாமமான நல்ல னாயக புரத்தில் இருக்கும் அஸேஷ வித்வந் மகாஜந
24. ங்கள் குரு ஸ்வாமியள் ராய தீக்ஷிதர் புரோகித ராமய்யர் ஸ்ரீநி
25. வாச தீக்ஷிதர் பெரிய திருகாம சாஸ்திரியள் சின்ன திருகாம சாஸ்திரி
26. யள அநந்த நாராயண சாஸ்திரியள் மகாதேவ சிவந் நாராயண சாஸ்திரிய
27. ள் திம்மண்ணா பாகவதர் அய்யவாரு பண்டிதர் வேங்கடய்யன் இந்த பனி
28. ரெண்டுபேர் மகாஜனங்களுக்கு பூமி தாந சாசனம் பண்ணி குடுத்தபடி நம்
29. முதாகிய வரிசபத்து' சர்வ மாநியத்தில் வேட்டங்குடி தென்னமரத்து வெளி
30. சின்ன காடுவெட்டிக்கி கிழக்கு காட்டுக்கு வடக்கு கொட்டாபிளி தெடலு
31. க்கு மேற்கு தில்லயோடை புதுக்கரைக்கி தெற்கு இந்த னால் சதுரத்து
32. க்கு உள்பட்ட நஞ்சை நிலம் பிஞ்சை நிலம் காடு கரம்பு கொளம் கு
33. ட்டை னீரோடும் வாக்கால் சகல சமுதாயமும் தங்களுக்கு ஸ
34. ஹிரண்யோதக தாராபூர்வமாக தாந சாசனம் பண்ணி குடுத்தப
35. டியினாலே இதில் உள்பட்ட நிதி நிே க்ஷப ஜலதரு பாஷாணாக்ஷு
36. ணாகாஸ்ரீ சித்த சாத்யமிந்நப்பட்ட அஷ்டபோக தேஜஸ் ஸாமியங்களுட
37. னே தாநாதி விநிமய விக்ரயங்களுக்கு யோக்யமாக ஆசந்திரர்க்கஸ்தா
38. யியாக புத்ரபௌத்ர பாரம்பர்யமாக சர்வ மாந்யம் ஆண்டனுப
39. வித்து கொண்டு சுகத்திலே யிருப்பீர்கள் ஆகவும் இந்தபடி சம்மதி
40. ச்சு நல்ல னாயகபுரம் அசேஷ வித்வந் மகாஜனங்கள் பனிரெண்டு
41. பேருக்கும் ராஜஸ்ரீ
42. அழகிய சிதம்பர ராவுத்தமிண்ட நயினார் அவர்கள் பூமிதான சாசனம் பண்ணிக் குடுத்தோம் அழகிய சிதம்பா ராவுத்த மிண்டர் சச்சிதாநந்த
43. ராவுத்த மிண்டர் ஸ்வயம் பிரகாச ராவுத்த மிண்டர் பரப்பிரம்ம ராவுத்த மிண்
44. டர்

(அ) தான பாலன யோர்மத்யே
தானாத் ஸ்ரேயோனு பாலனம்
தானாத் (45) ஸ்வர்க மவாப்னோதி பாலனா தச்யுதம் பதம்

(ஆ) ஸ்வதத்தா திகம் புண்ய (46)ம்
பாதத் தானு பாலனம்
பரதத் தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத்

(இ) ஏ (47) கைவ பகினீ லோகே
ஸர்வேஷா மேவ பூபுஜாம
நயோஜ்யா ந கரக் (48) ராஹ்யா
விப்ர தத்தா வசுந்தரா

(ஈ) ஸ்வதத்தா துஹிதா ப்ரோக்தா
பரதத்தா (49) ஸஹோதரி
பித்ரு தத்தா து மாதாஸ்யா
தத்வாதே தத் த்ரயம் த்யஜேத்

(உ) (50)ஸ்வதத்தாம் பரதத்தாம் வா
யோ ஹரேத் வசுந்தராம்
ஷஷ்டி வர்ஷ (51) ஸஹஸ்ராணி

**விஷ்டாயாம் ஜாயதே க்ருமி**
நல்ல தம்பி சுபமஸ்து.

**சுலோகங்களின் பொருள் விளக்கம்**

(அ) அறம் செய்தல், பிறர் செய்த அறத்தைப் பேணுதல் ஆகிய இவ் விரண்டில் பிறர் செய்த அறத்தைப் பேணுவதே சிறந்தது. அறம் செய்தால் தேவருலகு மட்டுமே கிடைக்கிறது. ஆனால் அறத்தைப் பாதுகாப்பதால், காப்பவன் விட்டுணுவின் பதத்தையே அடை கின்றான்.

*(ஆ) தானே அறம் செய்வதை விடப் பிறர் கொடுத்ததைக் காத்தல் பல மடங்கு சிறந்த நல்வினையாகும். பிறர் அளித்தவைகளைக் கவர்ந்து கொண்டால், தான் கொடுக்கும் கொடையும் பயனற்றதாக ஆகிவிடும்.*

*(இ) உலக மன்னர் அனைவருக்கும் நிலமகள் உடன் பிறந்தாளாக விளங்குகிறாள். அதனால் அந்தணர்களுக்காக அளிக்கப்பட்ட இந்த நிலம் மற்றவர்களால் கைப்பற்றப் படுவதற்கும் துய்க்கப்படுவதற்கும் உரியதாகாது.*

*(ஈ) ஒருவருக்குத் தன்னால் கொடுக்கப் பட்ட கொடை மகளைப் போன்றது. பிறர் அளித்தது உடன் பிறந்தாளை ஒத்தது. தகப்பனாரால் தரப்பட்டது தாயை அனையது. எனவே இம்மூன்று வகையான அறங்களையும் தான் கைக்கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும்.*

*(உ) தான் அளித்ததையோ, அல்லது பிறர் கொடுத்ததையோ ஒருவன் கைப்பற்றக்கூடாது. அவ்வாறு தரப்பட்ட நிலத்தைக் கைப்பற்றுகிறவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் புழுவாகப் பிறந்து உழல்வான்.*

## முடிவுரை

மராட்டியர் காலத்தில் சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை வட்டாரங்களில் இருந்த பாளையக்காரர்கள் அப்பகுதியில் இருந்த அந்தணர்களுக்கு நிலம் தானம் வழங்கும் உரிமைபெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பதை வடகால் பாளையக்கார மாளிகை செப்புப் பட்டயம் வாயிலாக அறியமுடிகிறது.

## துணை நின்ற நூல்கள்

1. இராசு, செ., (1983), தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. இராசு, செ., (1987), தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. ராஜா, ஆ., (2024), தஞ்சை மராட்டியர் காலக் கல்வெட்டுக்கள்: (தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகச் சான்றுகளை முன்வைத்து), சான்லக்ஸ் பன்னாட்டு தமிழாய்விதழ், தொகுதி 9, எண்.2.
4. வேங்கடராமையா, கே.எம்., தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்,
5. வேங்கடராமையா, கே.எம்., (1987), தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
6. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., (2005), தமிழகச் செப்பேடுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
7. Raju,S., (1987), Thanjai Marathiyar kalvettukal, Tamil University, Thanjavur.
8. Subramaniyam, T.N., (1977), Thenninthiya koyil sasanankal, Vol.2, Arasinar keezhthisai chuvadi Noolagam, Chennai.